வாக்குமூலம்

**திருவையாறு நீதித்துறை நடுவர் நீதிமன்றம்**

வழக்கு எண்.C.C. 157/2023

வழக்கு சாட்சி- **அ.சா. 2**

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர் | பொன்னுராமன் | : | ஜாதி | |
| தந்தை/கணவர் பெயர் | கிருஷ்ணசாமி | : | தொழில் | விவசாயம் |
| கிராமம் | பாதிரக்குடி | : | சமயம் | |
| தாலுக்கா | பூதலூர் | : | வயது | 69/2024 |

(எதிரிகள் ஆஜரில்லை. மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்ட.து)

**நாள் : 28.06.2024**

**முதல் விசாரணை** :

நான் மேற்கண்ட முகவரியில் குடியிருந்து விவசாயம் செய்து வருகின்றேன். அ.சா.1 எனது பேத்தியாவார். எதிரிகள் அருண்குமார், செந்தமிழ்ச் செல்வி ஆகியோரை எனக்கு தெரியும். கடந்த 16.02.2023 ம் தேதி இரவு 8.30 மணியளவில் நான் எனது வீட்டில் இருந்தபோது, எதிரிகள் அருண்குமார் , செந்தமிழ்ச் செல்வி மற்றும் நிறைய நபர்கள் வந்து என்னிடம் தகறாறு செய்தார்கள். அதை எனது பேத்தி செல்போனில் வீடியோ எடுத்தார். அப்போது எதிரிகள் இருவரும் தேவடியா என தகாத வார்த்தைகளால் எனது பேத்தியை திட்டினார்கள். செந்தமிழ்செல்வி அவள் தான் வீடியோ எடுக்கின்றாள். அந்த செல்போனை பிடுங்குடா என்று அவரது தம்பி அருண்குமாரிடம் சொன்னார். உடனே அருண்குமார் எனது பேத்தியை விரட்டிச் சென்றதால் என் பேத்தி ஓடினார். அப்போது அருண்குமார்

என் பேத்தியின் நைட்டியை பிடித்து இழுத்து கிழித்துவிட்டார். பின்னர் நாங்கள் தோகூர் காவல் நிலையம் சென்று சம்பவம் தொடர்பாக புகார் அளித்தோம். போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**எதிரிகள் தரப்பபில் குறுக்கு விசாரணை : இல்லை.**